**OS.No.196/2021** **P.W.1-ஸ்வர்ண கௌரி** **20.07.2026**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் அப்பாட்மெண்டில் 1997ல் இருந்து குடியிருந்து வருகிறேன். அந்த வீடு என்னுடைய சொந்த வீடாகும். என்னுடைய பிராதில் 5வது பத்தியில் மாடியில் உள்ள கான்கிரீட் மழை வெயிலால் பாதிக்காமல் இருப்பதற்கு பாதுகாப்பு பூச்சி பூசுதலுக்காக ரூ.60,000/- கொடுத்ததாக சொல்லியுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. பாதுகாப்பு பூச்சி பூசுதல் எந்த வருடம் செய்யப்பட்டது என்றால் 2016ல் செய்யப்பட்டது. 20.06.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்படி பாதுகாப்பு பூச்சி பூசுதல் சரிவர செய்யவில்லை என்று தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கப்படவில்லை. அவரிடம் வாய்மொழியாகவும், அதன் பிறகு அனுப்பிய அறிவிப்பில் சொல்லியுள்ளேன்.

2. நான் அந்த வீட்டில் இருந்தபோது பராமரிப்பு தொகை செலுத்தியதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பராமரிப்பு தொகை பணமாக செலுத்துவோம். அவ்வாறு செலுத்திய தொகைக்கு அவர்கள் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. அப்பாட்மெண்ட் என்று இருந்தால் நிச்சயமாக பராமரிப்பு தொகை வசூலிக்கப்படும், வசூலிக்கப்படும் தொகைக்கு ரசீது கொடுக்கப்படும், நான் வழக்கிற்காக ரசீது எதுவும் கொடுக்கப்படவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, 2019ல் தான் அசோசியேஷன் ஆரம்பிக்கப்பட்டது. அது வரைக்கும் அவர்கள் ரசீது எதுவும் கொடுக்கவில்லை.

3. அசோசியேஷன் தொடங்கிய பிறகு செலுத்திய தொகைக்கு ரசீது கொடுத்தார்கள், அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் செலுத்திய தொகைக்கு நிலுவை தொகை எதுவுமில்லை என்று அசோசியேஷனின் வழங்கிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. நான் ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். தற்போது வரை ரூ.1,30,000/-க்கு மேல் பராமரிப்பு தொகை செலுத்த வேண்டியுள்ளது என்றால் சரியல்ல. நான் அசோசியேஷன் செயலாளருக்கு எதிராக இழப்பீடு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ரூ.10,00,500/- சேதாரம் ஏற்பட்டதாக கூறியுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இழப்பு ஏற்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. அதே வீட்டில் தான் தற்போது வரை குடியிருந்து வருகிறேன். அந்த அப்பாட்மெண்டில் மொத்தம் 10 வீடுகள் உள்ளது. நான் பி பிளாக்கில் முதல் மாடியில் வசிக்கிறேன். மற்ற நபர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்று எனக்கு தெரியாது. பாதுகாப்பு பூச்சி பூசுதல் காரணமாக என் வீட்டிற்கு ஏற்பட்ட பாதிப்பை உரிய நிபுணர்களை வைத்து கணக்கிட்டுள்ளேனா என்றால் இல்லை. அசோசியேஷன் மீட்டிங்கில் நான் கலந்து கொள்ளவில்லை. நான் அதில் உறுப்பினராகவும் இல்லை. இழப்பீடு மற்றும் அவதூறு ஏற்பட்டதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இழப்பீடு பெறும் அளவிற்கு சட்ட ரீதியாக எனக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை